சுருக்கம்

பாசனம் – நீர்வள ஆதாரத்துறை – திருச்சி மாவட்டம், முசிறி வட்டம் முசிறியில் ஆற்று பாதுகாப்பு உபகோட்ட அலுவலகம் கட்டும் பணி ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் 2009–2010ம் ஆண்டு ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் கட்டுதல் – நிர்வாக ஒப்புதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித் (என்.2) துறை

அரசாணை (நிலை) எண்.153 நாள். 05.08.2009.

படிக்க:-

தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்களின் கடித எண். எப்.9000/2008, நாள். 20.01.2009.

------

ஆணை:-

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் நீர்வள ஆதாரத் துறையின் தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் திருச்சி மாவட்டம், முசிறி வட்டம் முசிறியில் ஆற்று பாதுகாப்பு உபகோட்ட அலவலகம் கட்டும் பணிக்காக ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் 2009–2010–ம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

இப்பணிக்கான விவரம் பின்வருமாறு:-

திருச்சி மாவட்டம், முசிறியில் உள்ள ஆற்று பாதுகாப்பு உபகோட்ட அலுவலகம் 1875ஆம் வருடம் கட்டப்பட்டதாகும். இது மெட்ராஸ் டெரஸ் கூரையுடன் கட்டப்பட்டுள்ளது. இந்த கூரையில் வெடிப்புகள் ஏற்பட்டும் மரதூண்கள் கரையானால் அறிக்கப்பட்டும் மிகவும் பழுதடைந்த நிலையில் எந்த நேரத்திலும் விழுந்துவிடக்கூடிய நிலையில் உள்ளது. இக்கட்டிடத்தின் சுவர்கள் சுண்ணாம்பு கலவையால் கட்டப்பட்டுள்ளதால் பலமிழந்தும் ஈரக்கசிவுடனும் உள்ளது. ஆகவே மிகவும் பழுதடைந்துள்ள இக்கட்டிடத்தை இடித்துவிட்டு புதியதாக கட்ட வேண்டியுள்ளது மிகவும் அத்தியாவசியமாகிறது. மேலும் அலுவலக பணிகள் அனைத்தையும் சீராக மேற்கொள்ளவும், பொதுமக்கள், விவசாயிகள் பாசனம் தொடர்பாக உதவி செயற்பொறியாளரை சந்தித்து கலந்துரையாடவும் உபகோட்ட அளவில் ஆய்வு கூட்டங்கள் நடத்தவும் அலுவலக கோப்புகள் மற்றும் முக்கிய பதிவேடுகள் போன்றவைகளை முறையாக பாதுகாப்பதற்கும், கணினி இயங்குவதற்கும், அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய புதிய உபகோட்ட அலுவலகம் கட்டடம் கட்டுவது மிகவும் அவசியமாகும் எனவும் புதிதாக கட்டப்பட உள்ள உபகோட்ட கட்டடம் 135.25 சதுர மீட்டர் பரப்பளவு உடைய லோடு பியரிங் கட்டிடமாக கட்டப்பட உள்ளது. இந்த புதிய கட்டிடத்தில் உதவி செயற்பொறியாளர் அறை கழிவறையுடன் கூடிய விவசாயிகள் கூட்ட அறை, ஆவண காப்பக அறை, கணினி அறை, தொலைபேசி அறை, கண்காணிப்பாளர் அறை மற்றும் அலுவலகப் பகுதி ஆகியவைகளுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது என்றும் இந்த புதிய கட்டிடமானது, செங்கல் சுவர்களின் மேல் காப்பிடப்பட்ட சிமெண்ட் கான்கீரீட் கூரையுடன் அமைக்கப்பட உள்ளது. உட்புற தண்ணீர் மற்றும் கழிவறை அமைப்புகளும் மூல மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ளது. உட்புற வெளிபுற மின்சார அமைப்புகளுக்கு ஒட்டு மொத்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை 2009–2010ஆம் ஆண்டில் ரூ.12.00 இலட்சம் ஆகும் என்றும் இத்திட்டம் திருச்சி மண்டல தலைமைப்பொறியாளர், அவர்களால் செயலாக்கப்படும். எனவே இத்திட்டத்தினை செயல்படுத்த கூடுதல் பணியாளர்கள் தேவைப்படாது எனவும் தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்) தெரிவித்துள்ளார்.

3. திருச்சி மாவட்டம் முசிறிவட்டம் முசிறியில் ஆற்று பாதுகாப்பு உபகோட்ட அலவலகம் கட்டும் பணியினை ரூ.12.00/– இலட்சம் மதிப்பீட்டில் 2009–2010–ம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் நிலைநிதிக்குழு ஏற்பளித்துள்ள நிலையில், திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், முசிறியில் ஆற்று பாதுகாப்பு உபகோட்ட அலுவலகம் கட்டும்பணிக்கு ரூ.12.00 இலட்சம் (ரூபாய் பன்னிரெண்டு இலட்சம்) நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது. சில்லரைச் செலவினம் சிறுமேற்பார்வை செலவுகள் மற்றும் எதிர்பாரா செலவுகள் ஆகிய அனைத்து இனத்தின் கீழ் ஏற்படும் மொத்த செலவுகள் மொத்த பணி(Works) மதிப்பீட்டுத் தொகையில், 2.5%க்கு மேல் மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

4. மேற்கண்ட பணிக்கான செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்.

4701–பெரிய நடுத்தர பாசன திட்டங்கள் குறித்த மூலதன செலவு –03 நடுத்தர பாசனம் – வணிகத் தன்மை வாய்ந்தது – 380 பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பின் கீழ் அலுவலகம் கட்டிடம் கட்டுதல், புதுப்பித்தல் மற்றும் சீரமைத்தல் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநில திட்டம் - JP திருச்சி மாவட்டம், முசிறி வட்டம் முசிறியில் ஆற்று பாதுகாப்பு உபகோட்ட அலுவலக கட்டிடம் கட்டுதல் 16 பெரும் பணிகள் (து.தொ.கு 4701 03 380JP 1605).

5. தலைமைப்பொறியாளர், திருச்சி மண்டலம் அவர்கள் மேற்கண்ட திட்டத்தை செயல்படுத்தி, திட்டப்பணி முன்னேற்றம் குறித்த அறிக்கை உடனுக்குடன் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறை அ.சா.எண்.34045/PWII/09, நாள். 22.6.2009 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு.இராமசுந்தரம்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மை தலைமைப்பொறியாளர்,
(நீர்வள ஆதாரத்துறை) (ம), தலைமைப்பொறியாளர் (பொது),
பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை–5.
தலைமைப் பொறியாளர், (நீர்வள ஆதாரத்துறை),
திருச்சி மண்டலம், திருச்சி –20.
தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்), சென்னை–5.
நகல்கள்
பொதுப்பணித்துறை ஐஸ்பெஷல் பிரிவு, சென்னை–9.
நிதித்துறை, சென்னை–9.
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை–9.
மாநிலக் கணக்காயர், சென்னை 18/35.
அனைத்துப் பாசனப் பிரிவுகள், சென்னை–9.
நிதி(பொ.ப-II) வரவு செலவு, பொதுத்துறை, சென்னை–9.

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.